1995 ஏப்ரல் 5]

பிரச்சினையைக் குறிப்பிட்டு கூறுவீர்களேயானால், அதுகுறித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாதாரணமாக கால்நடைத் துறை அமைச்சரிடத்திலே ஒரு வாக்குறுதியையும் நீங்கள் வாங்கிவிட முடியாது.

வினா எண். 225, திரு பி.ஆர்.எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை; திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை; திரு. செ.து. வரதராசன், இருக்கையில் இல்லை. திரு. சி. இராமசுவாமி கேட்கிறார்களா? கேள்வி கேட்ட 3 உறுப்பினர்களும் இல்லை. திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

225—

கடல்நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் நிலையம் அமைத்தல்

14704*—திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்,**

திரு. எ. தெய்வநாயகம்

மற்றும் திரு. செ.து. வரதராஜன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெப்பமான கடல் நீரிலிருந்து 100 மெகாவாட் திறனுள்ள மின்சாரம் தயாரிக்கும் நிலையம் ஒன்றை அமெரிக்க நாட்டு நிறுவனம் ஒன்றின் மூலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்காக மத்திய அரசின் அனுமதி கிடைத்துவிட்டதா?

(இ) எப்பொழுது எந்த இடத்தில் நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அமெரிக்க நிறுவனமான சீசோலார் பவர் என்னும் நிறுவனத்துடன் இந்த கடல்நீர் வெப்ப சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மின்நிலையம் அமைக்க மைய அரசு கருத்துரு அனுப்பியதை தொடர்ந்து தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் செயல்பட்டு அதற்காக ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது.

[1995 ஏப்ரல் 5

(இ) இந்த மின்நிலையம் சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் நிறுவப்பட உள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில், 24-1-94 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் முன்னிலையில் "சீ சோலார் பவர்" என்னும் அமெரிக்க நிறுவனமும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் கைசாத்திட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி நிறுவனத்தின் மூலம் இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார உற்பத்தித் திட்டமானது, Central Electricity Authority of India என்கிற சி.இ.எ. அவர்களுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஏற்கனவே ஒப்பந்தம் செய்திருக்கிற அந்த நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு, அந்தப் பணிகளை மின்சார வாரியம் முடுக்கி விட்டிருக்கிறது. Power purchase agreement என்று சொல்லப்படுகிற அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டவுடன், அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது, முன்னுரிமை அடிப்படையில் ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் 3 பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள ஒரு மாவட்டம். அங்கே கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்னுரிமை தருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுசம்பந்தமாக ஆய்வுகளைச் செய்த பின்னாலேதான் இந்த குலசேகரப்பட்டினம் ஒரு சரியான

1995 ஏப்ரல் 5]

இடம் என்பதைத் தேர்வு செய்து அந்தக் கடல் நீர் வெப்பத்திலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு அங்கே ஏதுவாக இருக்கிறது என்பதை அனலைஸ் செய்ததற்குப் பின்னாலேதான் அந்த இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார்கள் அந்த நிறுவனத்தார். ஆகவே முதலிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டு அதற்குப் பின்னாலே படிப்படியாக மற்ற பகுதிகளிலே இருக்கின்றதை அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பெரியதாக இருக்கிறபடியால் அதற்குப் பணச் செலவு அதிகமாகும். ஆகையினால் இதற்கு மத்திய அரசு உதவி செய்யுமா? அல்லது நாமே எல்லா பொருட்களையும் சேகரித்துச் செய்யவேண்டுமா எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 'சீ சோலார் பவர்' என்ற அந்த அமெரிக்க நிறுவனம் தன் சொந்த செலவிலேயே சுமார் 250 மில்லியன் அமெரிக்க டாலர்கள் தொகையை ஒதுக்கி இந்த நிறுவனத்தை நிறுவ இருக்கிறார்கள். ஆகவே இதுசம்பந்தமாக நாம் ஒன்றும் இங்கே நிதியை முதலீடு செய்வதில்லை. ஆகவே மத்திய அரசு நிதிஉதவி செய்வது என்ற நிலைக்கு இங்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்க நாட்டு உதவியுடன் கடலிலிருந்து மின்சாரம் எடுக்கும் தொழிற்சாலை குலசேகரப்பட்டினம் அருகிலே ஆய்வு செய்வதாகச் சொன்னார்கள். ராம்நாட் விவேகானந்தர் அமெரிக்கா செல்லும்போது வழி அனுப்பிய பூமி. இப்போது அந்தக் கடலிலிருந்து மின்சாரம் எடுக்கும் தொழிற்சாலையை இராமநாதபுரத்தில் அமைக்க ஆய்வு செய்யப்படுமா? இதுசம்பந்தமாக விரிவாக அமெரிக்க நிறுவனத்திடம் பேசுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அமெரிக்கா செல்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னை அமெரிக்காவிற்கு அனுப்புவதிலே மிகவும் ஆர்வமாக இருக்கிறார் என்று நான்

நினைக்கிறேன். இங்கு இருந்தாலாவது அவருக்கு பலவித காரியங்களை நான் செய்து கொண்டிருப்பேன். பொதுக் காரியங்களை. அவர் கேட்கின்ற பொதுவான கோரிக்கைகளை நான் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. பொதுவான கோரிக்கைகளைத் தருகின்றபோது அவர் தொகுதிக்கு பல வேலைகளைச் செய்யமுடியும். ஆகவே என்னை அங்கே அனுப்பி வைப்பதிலே அவருக்கு என்ன ஆனந்தம் என்று தெரியவில்லை. பொதுவாக அந்த ஒப்பந்தம் போட்ட பிறகு, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று மின்சார வாரியத்திற்கும், நம்முடைய தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்கும் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் டிசம்பர் *1994* ஆம் ஆண்டு சென்ட்ரல் எலக்ரிக் அத்தாரிட்டி அவர்களுக்கு, அதாவது மைய அரசினுடைய மின் நிறுவனத்தின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம். 'பவர் பர்ச்சேஸ் அக்ரீமென்ட்' என்று சொல்லப்படுகின்ற அந்த ஒப்பந்தத்தை ஃபைனலைஸ் செய்வதற்காக சட்டத்துறையிலே கலந்தாலோசித்து, சில விதிமுறைகளை எல்லாம் திருத்தி எப்படி அதை ஒழுங்குபடுத்த வேண்டுமோ அதற்கான பணிகளிலே சட்டத்துறை ஈடுபட்டிருக்கிறது. ஆகவே அதற்கு முனைப்பான நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் அமெரிக்கா செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே இந்தத் திட்டப் பணிகளை முறைப்படி நிறைவேற்றியதற்குப் பின்னால், அதற்குப் பிறகு அதற்கான சூழ்நிலை இருந்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நான் அங்கு செல்ல வேண்டுமென்று நினைத்தால் போகலாமே தவிர, இப்போது போக வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *226,* திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

226—

கருமேனி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

34338*—திரு. ஆ. செல்லதுரை:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—